## (3) தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (இ) அரசிதழ் பதிவுபெறு அலுவலர் வேலைநிறுத்தம் வாபஸ் ஆன பிறகு அரசு அறிக்கை அளிப்பது குறித்து.

திரு. ரா. உமாநாத்: அவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். என்.ஜி.ஓ. வேலைநிறுத்தம் இன்று முதல் வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இவர்களுடைய வேலை நிறுத்தம் பற்றி ஒரு ஸ்டேட்மென்ட்டை இங்கே கொடுத்திருக்கிறார்கள். இப்போது முடிவு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதன் மீதும் ஒரு அறிக்கையை இந்தச் சபையில் கொடுத்தால் நன்றாக இருக்கும், அதைச் செய்யும்படி முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது முதலமைச்சரின் விருப்பத்தைப் பொறுத்தது, நான் கட்டாயப்படுத்த முடியாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே. நாளையதினம் ஒரு அறிக்கை விடுவதாக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: தாங்கள் ரகுமான்கான் அவர்களுக்கு எந்த விதியின் அடிப்படையில கடிதம் எழுதினீர்கள் என்று கேட்டதற்கு அவர் எந்த அடிப்படையில் பேசினாரோ அந்த அடிப்படையில் தான் கடிதம் எழுதப்பட்டதாக தெரிவித்தீர்கள், ஒரு தவறு நடந்து விட்டது என்பதற்காக. ஒரு தவறுக்கு இன்னொரு தவறு பரிகாரம் ஆகுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி முடிவு செய்வதற்கு அவைத் தலைவருக்கு டிஸ்க்ரீஷனரி பவர் இருக்கிறது. அந்த முறையில் தான் கடிதம் அனுப்பியிருக்கிறேன்.

திரு. எம். சுப்பிரமணியம் (சின்னசேலம்): கள்ளக்குறிச்சியில் பெண்கள் உயர் நிலைப்பள்ளியில் நடைபெற்ற தேர்வில், சில தவறுகள் ஏற்பட்டிருப்பதாகவும், இதன் காரணமாக மாணவிகள் தேர்வு எழுதவில்லை என்றும் எனக்குத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. இப்படி தேர்வைப் புறக்கணித்த மாணவிகளுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் மொத்தமாக இதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் அதைக் கவனிக்கவில்லை என்றால் அதற்கு நான் பொறுப்பு அல்ல. அது என் குறையும் அல்ல. அடுத்தது கவன ஈர்ப்புத் தீர்மானம்.